கிளியின் உருவப்படத்தை வரைந்து அதில் தானியங்களை ஒட்டி அழகுபடுத்துவோமா!

பெயர் : ______________ வகுப்பு : ______________

காய்கறிகள், பழங்கள், தானியங்கள் மற்றும்
பல்வேறு வகையான உணவுப் பொருள்களின்
படங்களை ஒட்டி படத்தொகுப்பு தயார்
செய்வோமா !



## உங்களுக்குத் தெரியுமா ?

சாக்லேட், ஐஸ்கிரீம், குளிர் பானங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவது உடலுக்கு நல்லதா ? கெட்டதா ? ஏன் ?



# 2. வேலை

படத்தில் ஒவ்வொருவரும் செய்கின்ற வேலைகளைப் பாருங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் ? என்று கூறுங்கள்.



ஒரு பொருளை நகர்த்த, அதனை இழுக்கவோ அல்லது தள்ளவோ வேண்டும்.







இழுத்தல், தள்ளுதல் மூலமாக வேலைகள் செய்யப்படுகின்றன.



மக்கள் தேரினை
இழுப்பதால் தேர்
நகர்கிறது.

கயிறு இழுக்கும்
போட்டியில் இரு
அணியினரும்
கயிற்றைத் தம் பக்கம்
இழுக்கிறார்கள்.





குதிரை, வண்டியை
இழுப்பதால்
வண்டி முன்நோக்கிச்
செல்கிறது.



காய்கறி வண்டிக்காரர்
வண்டியைத்
தள்ளுவதால் வண்டி
முன்நோக்கி
நகர்கிறது.



மீனவர்கள்
கட்டுமரத்தைத்
தள்ளுவதால்
கட்டுமரம் கடலில்
செல்கிறது.



குழந்தை
நடைவண்டியைத்
தள்ளுவதால் வண்டி
நகர்கிறது.



வண்டியை
இழுக்கும் போதும்
தள்ளும் போதும்
முன்னும் பின்னும்
நகர்கிறது.





ரம்பத்தை
இழுப்பதாலும்
தள்ளுவதாலும் மரம்
அறுபடுகிறது.



## படங்களைப் பாருங்கள்! என்ன செயல் நடைபெறுகிறது ?











இழுத்தல், தள்ளுதல் மூலமாக
வேலை செய்யப்படுகிறது.

படத்தில் இழுத்தல் செயலுக்கு 1 எனவும், தள்ளுதல் செயலுக்கு 2 எனவும் எழுதி வகைப்படுத்துங்கள்.












